**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 49. ஸ்ரீமதி. குபரா பாய்**

---

டில்லிக்கு அருகில் வாழ்ந்த ஒரு அரசியல் ப்ரமுகரின் அருமை ஒரே மகள் தான் குபரா பாய்.பூர்வ ஜென்ம புண்யத்தில் மிகவும் ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டு ஒரு பக்குவத்தை அடைந்திருந்த அவருக்கு விரைவிலேயே அவர் பெற்றோர்கள் கல்யாணம் செய்து வைத்தனர்.

ஆனால் அவருக்கோ இல்லற தர்மத்தில் சற்றும் ஈடுபாடே இல்லை.அதற்காக யாரையும் வெளியில் பகைத்துக் கொள்ளவில்லை.ஆனால் உண்மையான ஈடுபாடு இல்லாமல் கணவனுடன் வாழ குபரா பாய் விரும்பவில்லை.அது கணவனுக்குச் செய்யும் த்ரோகம் என்றே எண்ணினார்.அதே வேளையில் உண்மையான மூல பரம புருஷனுக்கே நாம் அடிமையாக வாழ வேண்டும் என்ற பக்தி மார்கத்தை மனதில் கொண்டு அவர் வாழ முற்பட்டார்.

காலம் போகப் போக அவருக்குள் இருக்கும் ஸ்வதந்த உணர்வு தலை தூக்க, கடிதம் ஒன்றைத் தன் கணவனுக்கும் பெற்றோருக்கும் எழுதி விட்டு வ்ருந்தாவனம் வந்து ஒரு சன்யாசினியாக வாழ முற்பட்டார்.

**விவாகரத்து செய்த பக்தை**

சதா பக்தி பாவத்தில் ஈஸ்வர பஜனைகள் செய்வதும் தன்னால் முடிந்த உடல் ரீதியான சேவையகளைக் கோயில்களிலும் தெருக்களிலும் செய்வதையும் கைக்கொண்டு வாழ்கிறார்.எப்படியோ கணவனும் தந்தையும் இவரைக் கண்டு பிடித்து வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.கணவனின் அனுமதியின் பேரில் அவர் மேற்கொண்டு தன் ஆன்மீகப் பயணத்தைச் செய்ய முடியாது என்று அறிந்த போது விவாகரத்து செய்து கொண்டு தந்தை வீட்டுக்கே வந்து விட்டார்.

**ஊர்த்தலைவன் செய்த காதல்**

தாயும் தந்தையும் மகளுமாய் பக்தி பாவத்தில் ஊரே வியக்கும்படி வாழ்ந்தனர்.மெதுவாக அவர்கள் வீட்டிலேயே கோயிலை உருவாக்கி சத்சங்கம் பஜனைகள் மனித சேவை மூலம் ஆன்மீகம் செய்தனர்.இதனால் கவரப்பட்ட அவ்வூர்த் தலைவன் தன் நண்பர்களுடன் இவரது பஜனைகளிலும் சத்சங்கத்தில் நித்யம் கலந்து கொள்கிறான்.ஆனால் போகப் போக குபரா பாயைக் கல்யாணம் செய்து கொண்டு விடும் ஆசையும் காதலும் அவனுள் வருகிறது.

எப்படியாவது குபராபாயின் பெற்றோரிடம் பேசி அவரைக் கல்யாணம் செய்து

கொள்ள எண்ணினான்.அன்று கார்த்திகை ஏகாதசி.வடதேசத்தில் மிகவும் ப்ரசித்தமான நாட்களில் ஒன்று.விடிய விடிய பஜனையும் பூஜைகளும் கோயில் ஏற்பாடு ஆகிட, அந்நாளில் தலைவன் தன் கருத்தை வெளியிட எண்ணி விரைந்தான்.

பஜனை ஆரம்பம் ஆகிட, அவன் மனமோ அவளை எண்ணி ஏங்க, ஒரு கட்டத்தில் அவளது ஆத்மா இவனுள் நிறைந்து, **"அன்பரே! உன் எண்ணம் அறிகிறேன்.தவறில்லை! ஆனால் என்னிடம் அவ்வெண்ணம் இல்லையே! அடியேன் பெண் பாவனை மறந்து நாள் ஆயிற்று.உடலால் தான் பெண். இப்போது அடியேன் கண்ணனின் மயமாகவே இருக்கிறேன்.என்னால் உன் இச்சைகளைப் பூர்த்தி செய்ய முடியாதே! மீண்டும் விவாகரத்து செய்தால் என்ன ஆவது? யோசி!"** என்று உணர்த்தியது.

குபராபாயின் ஆன்மீக வாழ்க்கைக்குத் தான் தடையாகக் கூடாது, அதுவே அவளது அன்பிற்குத் தான் செய்யும் மரியாதை என்று உணர்ந்த அவ்வூர்த் தலைவன் மனம் மாறி வேறு கல்யாணம் செய்து கொண்டு ஆன்மீகத்தில் லயித்தான்.

**இவர் நமக்கு உணர்த்தும் கருத்து**

ஆன்மீகத்தில் ஈடுபட வயது தடையே இல்லை.ஆனால் சிறிய வயதினர் தம் ஆன்மீகக் கொள்கையில் மிகவும் ஸ்ரத்தையும் கவனமுமாக இருக்க வேண்டும். குறிப்பாகத் தன் நடை உடை பாவனைகள் பேச்சுக்கள் கருத்துக்கள் ஆகியவற்றின் மூலம் தன்னுள் இருக்கும் ஸ்திடகாத்ர கொள்கையை ஊருக்கு உணர்த்த வேண்டும்.அப்படிச் செய்யின் அவர்கள் வழியில் மேடுபள்ளங்களை எளிதில் கடக்கலாம்.

தன் மக்களின் மனம் நிலை உணர்ந்து அவர்களுக்கு இல்லறம் செய்யப் பெற்றோரும் வழி காட்ட வேண்டும்.இல்லறம் கசந்த போது அதில் இருந்து விடுபட எண்ணி வெளியேறும் மக்களுக்குக் குடும்பம் உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஹரி ஓம்!